டிஜிட்டல் டெய்லி
# அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண்
ஜு வ ல் ல ர் ஸ்

agridoctor.in | 2.10.2026 வெள்ளிக்கிழமை | பக்கங்கள் 25 | RNI No.TNTAM/2012/49602 | Vol.14, Issue : 088 | Madurai | Online Edition

# சர்க்கரை வியாபாரிகளுக்கான கையிருப்பு விதிமுறைகளில் திருத்தம்

## பதுக்கலைத் தடுக்க அரசு நடவடிக்கை

புது தில்லி, அக்.1

நேற்று 1.10.2026 முதல் புதிய சர்க்கரைப் பருவம் தொடங்கி உள்ள நிலையில், பண்டிகைக் காலத்தில் நுகர்வோருக்கு நியாயமான விலையில் போதுமான அளவு சர்க்கரை கிடைப்பதை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு மேலும் வலுப்படுத்தியுள்ளது.

கொல்கத்தா, அதன் விரிவாக்கப்பட்ட மாநகரப் பகுதிகள், அசாம் மாநிலம் ஆகியவற்றைத் தவிர, மற்ற இடங்களில் 15 அக்டோபர் 2026 முதல் 30 நவம்பர் 2026 வரை, சர்க்கரை வியாபாரிகளுக்கான கையிருப்பு காலத்தை 15 நாட்களாக அரசு குறைத்துள்ளதுடன், கையிருப்பு வரம்பையும் 1,000 குவிண்டாலாக நிர்ணயித்துள்ளது.

திருத்தப்பட்ட விதிகளின்படி, 15 அக்டோபர் 2026 முதல் அமலுக்கு வரும் வகையில், ஒரு சர்க்கரை வியாபாரி பின்வரும் நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும்:

சர்க்கரை இருப்பை, அது பெறப்பட்ட நாளிலிருந்து 15 நாட்களுக்கு மேல் வைத்திருக்கக் கூடாது.



மகாத்மா காந்தியடிகளை நினைவு கூர்வோம்!

**விடுமுறை அறிவிப்பு**

காந்தி ஜெயந்தியை முன்னிட்டு அக்ரிடாக்டர்.இன் அலுவலகத்திற்கு 2.10.26 வெள்ளிக்கிழமை விடுமுறை.
எனவே எமது அடுத்த மின்னிதழ் 4.10.26 ஞாயிற்றுக்கிழமை வெளிவரும்.
- நிர்வாகி

நாடு முழுவதும் எந்த நேரத்திலும், எந்த இடத்திலும் 1,000 குவிண்டாலுக்கு மேல் சர்க்கரை இருப்பு வைத்திருக்கக் கூடாது.

பிராந்தியத்தின் குறிப்பிட்ட சந்தைத் தேவைகளைக் கருத்தில் கொண்டு, கொல்கத்தா, அதன் விரிவாக்கப்பட்ட மாநகரப் பகுதிகள், அசாம் மாநிலம் ஆகியவற்றுக்கான கையிருப்பு வரம்பு 2,000 குவிண்டாலாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

கொல்கத்தா, உத்தரப் பிரதேசம், மகாராஷ்டிரா, கர்நாடகா ஆகிய மாநிலங்களில் இருந்து சர்க்கரையைப் பெற்று, வடகிழக்குப் பகுதி உட்பட நாட்டின் கிழக்குப் பகுதிக்கு வழங்கப் படுகிறது. புவியியல் தடைகள், போக்குவரத்து சிக்கல்கள் போன்றவற்றைக் கருத்தில் கொண்டு அசாமிற்கான உயர் வரம்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

திருத்தப்பட்ட விதிமுறைகளின் நோக்கம், விநியோகக் கட்டமைப்பில் பதுக்கலைத் தடுப்பதும், நுகர்வோரை சீராகச் சென்றடைவதை உறுதி செய்வதுமாகும்.

தற்போது சர்க்கரையின் சராசரி சில்லறை சர்க்கரை விலை, ஆகஸ்ட் மாத உச்சத்திலிருந்து 15 சதவீதம் சரிந்துள்ளது. குறைந்த ஆலை விலையின் பலன் விநியோக கட்டமைப்பு முழுவதும் சென்றடைவதால், விலை மேலும் குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆலை சர்க்கரை விலை சுமார் 28 சதவீதம் சரிந்து, கடந்த மூன்று வாரங்களாக நிலையாக இருந்து வருகிறது.

சர்க்கரையின் போதுமான இருப்பை உறுதி செய்வதற்கும், சந்தையில் அதன் சீரான விநியோகத்தை உறுதி செய்யவும் அரசு எடுத்த பல்வேறு நடவடிக்கைகளின் தாக்கத்தை இந்த சரிவு பிரதிபலிக்கிறது.




agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# காடையாம்பட்டியில் விவசாய குழுக்களுக்கான திறன் வளர்ப்பு பயிற்சி



சேலம், அக்.1

சேலம் மாவட்டம், காடையாம்பட்டி வட்டாரம் ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்கம் மையத்தில் வேளாண்மைத் துறையின் அட்மா திட்டத்தின் மூலம் உழவர் ஆர்வலர் குழு மற்றும் உழவர் உற்பத்தியாளர் குழுக்களுக்கு திறன் வளர்ப்பு குறித்த விவசாயிகள் பயிற்சி நடைபெற்றது.

இப்பயிற்சியில் விவசாய குழுக்களை சிறப்பாக செயல் படுத்துதல், குழு மேலாண்மை, உறுப்பினர்களின் ஒருங் கிணைப்பு, உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல், மதிப்புக்கூட்டல், அரசின் வேளாண்மைத் திட்டங்களைப் பயன்படுத்துதல் மற்றும் குழுவின் வருமானத்தை அதிகரிக்கும் வழிமுறைகள் குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது.

மேலும், கூட்டு செயல்பாடு, தொழில்நுட்ப பயன்பாடு, வேளாண் பொருட்களுக்கு உரிய சந்தை வாய்ப்புகளை உருவாக்குதல் மற்றும் தொழில் முனைவோர் திறனை மேம்படுத்துதல் குறித்தும் விளக்கப்பட்டது.

இப்பயிற்சியில் விவசாய குழு உறுப்பினர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டு பயனடைந்தனர்.வேளாண்மை உதவி இயக்குநர் செல்வம், தோட்டக்கலை உதவி இயக்குநர் சௌந்தர்ராஜன், வட்டார தொழில்நுட்ப மேலாளர் கந்தசாமி மற்றும் காடையாம்பட்டி உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்தின் முதன்மை செயல் அலுவலர் மோனேஷ் ஆகியோர் கலந்து கொண்டு குழு முன்னேற்றத்திற்கான வழிகாட்டுதல்களை விளக்கினர்.

பயிற்சிக்கான அனைத்து ஏற்பாடுகளையும் உதவி வேளாண்மை அலுவலர் டயனா மற்றும் உதவி தொழில்நுட்ப மேலாளர் மோகன்ராஜ் ஆகியோர் சிறப்பாக செய்திருந்தனர்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN
JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

**சிறப்புச்சலுகை**



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# இரசாயன உர பயன்பாட்டை குறைத்து சமச்சீர் உரமிடுதலின் பயன்பாடுகள் குறித்து பயிற்சி

## விவசாயிகள் பங்கேற்பு

புதுக்கோட்டை, அக்.1

புதுக்கோட்டை மாவட்டம், அன்னவாசல் வட்டாரம், குடுமியான்மலை கிராமத்தில் விவசாயிகளுக்கு சமச்சீர் உரம் பயன்பாடு மற்றும் மண்வளம் மேம்படுத்துதல் பற்றிய விவசாயிகள் பயிற்சி நடைபெற்றது.



இப்பயிற்சியில் அன்னவாசல் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் மதியழகன், தலைமை வகித்து ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை முறைகளின் மூலமாக ரசாயன உரங்களின் பயன்பாட்டை குறைத்தலின் வழிமுறைகள் குறித்தும் மண்வளத்தினை மேம்படுத்த பசுந்தாள் பசுந்தழை உரங்களின் முக்கியத்துவம் குறித்தும் சமச்சீர் உரம் என்பது பயிருக்கு தேவையான முக்கிய ஊட்டச்சத்துக்களான நைட்ரஜன், பாஸ்பரஸ், பொட்டாசியம் ஆகிய சத்துக்களை சரியான விகிதத்தில் வழங்கி பயிரின் சீரான வளர்ச்சிக்கும் நல்ல மகசூலை பெறவும் வேறு வளர்ச்சி மேம்படுத்தவும் பூக்கும் மற்றும் காய்க்கும் திறனை அதிகரித்து மண்ணில் உள்ள ஊட்டச்சத்து குறைபாட்டை சரி செய்ய உதவுகிறது. அதிக உரமிடுவதால் பயிர்களின் வளர்ச்சி அதிகரித்து அதையே செலவு அதிகமான பூச்சி நோய் தாக்குதலுக்கு பயிர்கள் உள்ளாக நேரிடும். எனவே குறைந்த உரம் பயன்படுத்தி செலவிடும் செலவுகளை தவிர்த்து அதிக மகசூல் பெற்று இலாபம் பெறுவது குறித்தும் விளக்கமளித்தார்.

அதனைத் தொடர்ந்து உயிர் உர உற்பத்தி நிலைய வேளாண்மை அலுவலர் கருப்பையா, உயிர் உரங்களின் முக்கியத்துவங்கள் பயன்படுத்தும் முறைகள் குறித்தும் உயிர் உரங்கள் பயன்படுத்துவதால் ரசாயன உரங்களின் பயன்பாட்டை குறைப்பதால் மற்றும் மனித வளத்திற்கு ஏற்படும்

நன்மைகள் குறித்தும் உயிர் உரங்கள் பயன்படுத்துவதால் மண்ணில் உள்ள நுண்ணுயிர்களை பாதுகாத்து கரிமச் சத்துக் களை அதிகரித்து சமச்சீர் உரங்களின் முக்கியத்துவம் குறித்தும் எடுத்துரைத்தார். பின்பு மண் பரிசோதனை நிலைய வேளாண் அலுவலர் சந்தானம், பயிற்சி அளிக்கையில் மண் மாதிரி சேகரிக்கும் முறைகள் மண் ஆய்வின் முடிவுகளின் அடிப்படை யில் உரமிடுதலின் முக்கியத்துவம் குறித்தும் தொழு உரம் நுண்ணூட்டமிடுதலின் முக்கியத்துவம் மற்றும் பயன்பாடுகள் குறித்தும் பூச்சிக்கொல்லி மற்றும் களைக்கொல்லி மருந்துகள் பயன்படுத்துவதால் மண்ணில் ஏற்படும் தீமைகள் குறித்தும் பயிற்சி அளித்தார்.

இப்பயிற்சிக்கு அன்னவாசல் வட்டார தொழில்நுட்ப மேலாளர் ரவிராஜன் வரவேற்றார். முடிவில் அன்னவாசல் வட்டார வேளாண்மை அலுவலர் கௌசல்யா விவசாய அடையாள அட்டையின் முக்கியத்துவம் குறித்தும் தற்பொழுது வேளாண் துறையில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் மானியம் குறித்து விவசாயிகளுக்கு எடுத்துரைக்கப்பட்டு நன்றி கூறினார். இப்பயிற்சிக்கு குடுமியான்மலை கிராம 40 விவசாயிகள் கலந்து கொண்டு பயன் பெற்றனர். இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை குடுமியான்மலை உதவி வேளாண்மை அலுவலர் ஐஸ்வர்யா மற்றும் அன்னவாசல் அட்மா திட்ட உதவி தொழில்நுட்ப மேலாளர் சக்திவேல் செய்து கலந்து கொண்டனர். கலந்து கொண்ட விவசாயிகள் அனைவருக்கும் தொழில்நுட்ப கையேடுகள் வழங்கப்பட்டது.



# நெற்பயிரில் சூழலியல் அமைப்பு பகுப்பாய்வு பயிற்சி



விழுப்புரம், அக். 1

விழுப்புரம் மாவட்டம், வல்லம் வட்டாரம் வேளாண்மை துறை வேளாண்மை விரிவாக்க சீரமைப்பு திட்டத்தின் கீழ் ஆனத்தூர் கிராமத்தில் நெற்பயிரில் சூழலியல் அமைப்பு பகுப்பாய்வு என்ற தலைப்பில் ஒரு நாள் பயிற்சி நடைபெற்றது. மேலும் எதிர்வரும் ராபி பருவத்திற்கான முன்பருவ திட்டமிடல் மற்றும் விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது.

இப்பயிற்சியை குமாரி ஆனந்தி, வேளாண்மை துணை இயக்குனர், உழவர் பயிற்சி நிலையம், விழுப்புரம், தலைமை யேற்று சிறப்புரை ஆற்றினார். திண்டிவனம் வேளாண்மை அறிவியல் நிலைய பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் ஜமுனா நெற்பயிரில் சூழலியல் பகுப்பாய்வு மற்றும் மண் வளத்தை பாதுகாக்க விவசாயிகள் கடைபிடிக்க வேண்டிய தொழில்நுட்பங்கள், தண்ணீர் பற்றாக்குறையின் போது கடை குபிடிக்க வேண்டிய தொழில்நுட்பங்கள் குறித்து பேசினார். முனைவர் சிபி செபாஸ்டின், இணை பேராசிரியர் வேளாண் அறிவியல் நிலையம் திண்டிவனம் நெற்பயிரில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை மற்றும் காலத்திற்கு ஏற்ற ரகங்கள், நஞ்சில்லா உணவு தானிய உற்பத்தி குறித்து பேசினார். வல்லம் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் பொறுப்பு சத்தியா வேளாண்மை துறை மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள், அவற்றை பெறுவதற்கு உண்டான வழிமுறைகள், இடுபொருள் இருப்பு, மண்வள மேலாண்மை குறித்து பேசினார். ஆனத்தூர் பகுதி உதவி வேளாண்மை அலுவலர் தமிழரசி நெற்பயிரில் நன்மை செய்யும் பூச்சிகளை கண்டறிதல் பற்றி பேசினார். இப்பயிற்சியின் ஏற்பாடுகளை வட்டார தொழில்நுட்ப மேலாளர் சுபாஷ் மற்றும் உதவி தொழில்நுட்ப மேல மேலாளர் பாலாஜி செய்திருந்தனர்.

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர்,
  ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்**
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

### PRODUCT RANGES

| ISI PVC PIPE - | ASTM UPVC PIPE - | ISI CONDUIT PIPE - | ISI PLUMBING PIPE - | ISI BOREWELL CASING PIPE - |
|---|---|---|---|---|
| 20mm to 250mm (All Classes) | 21mm to 114mm (SCH 40, SCH80) | 16mm to 63mm (Light, Medium, Heavy) | 25mm to 50mm (15KG) | 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

### RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# மாவட்டத்திற்குள்ளான ஒருங்கிணைந்த பண்ணைய பயிற்சி

இராமநாதபுரம், அக்.1

இராமநாதபுரம் மாவட்டம், வேளாண்மைத் துறையின் கீழ் மண்டபம் வட்டாரம் ஆத்மா திட்டத்தின் கீழ் மாவட்டத்திற்கு உள்ளான விவசாயிகள் பயிற்சி ஒருங்கிணைந்த பண்ணையம் என்ற தலைப்பில் நடத்தப்பட்டது. இப்பயிற்சிக்கு ராஜேந்திரன் வேளாண்மை துணை இயக்குனர், உழவர் பயிற்சி நிலையம், பரமக்குடி, தலைமை தாங்கினார். மோனிஷா வேளாண்மை உதவி இயக்குனர் திருப்புல்லாணி (பொ) வரவேற்புரையாற்றி பயிற்சியினை தொடங்கி வைத்தார்.




பயிற்சியில் கார்த்திகா உதவி பொறியாளர் மண்டபம் வட்டாரம் கலந்துகொண்டு வேளாண் பொறியியல் துறையின் கீழ் பண்ணை குட்டைகள் மானியத்தில் அமைத்து தரப்படும் விபரங்களை விவசாயிகளுக்கு எடுத்துக் கூறினார். ராஜேந்திரன் வேளாண் துணை இயக்குனர் பேசுகையில் விவசாயிகள் ஒரு பயிர் சாகுபடி தொழில்நுட்பத்தை பின்பற்றாமல் ஒருங்கிணைந்த பண்ணையம் திட்டத்தின் கீழ் பயிர் சாகுபடி கால்நடை வளர்ப்பு, மீன் வளர்ப்பு, காளான் வளர்ப்பு, தேனீ வளர்ப்பு, ஆடு வளர்ப்பு, ஊடுபயிர் சாகுபடி போன்ற பல்வேறு முறைகளை ஒருங் கிணைத்து செயல்படுத்துவதன் மூலம் குறைந்த நிலப்பரப்பில் விவசாயிகள் அதிக லாபம் பெற முடியும் என துணை இயக்குனர் விவசாயிகளிடையே தெரிவித்தார்.

மோனி ஷா வேளாண் உதவி இயக்குநர் விவசாயிகளுடைய பேசுகையில் விவசாயிகள் ஒரே பயிரினை தொடர்ந்து பயிர் செய்யாமல் பல பயிர் சாகுபடி முறையை பின்பற்றுவதன் மூலம் மிகக் குறைந்த செலவில் நிகர லாபம் ஈட்ட முடியும் என தெரிவித்தார்.

விவசாயிகளுக்கு நெல் சாகுபடியில் அசோலா வளர்ப்பு நெல் சாகுபடியில் உயிர் உரங்களின் முக்கியத்துவம் மண்புழு உரம் தயாரித்தல் போன்ற பல தொழில்நுட்பங்கள் குறித்து விளக்க உரையாற்றப்பட்டது.

தாமஸ் துணை வேளாண்மை அலுவலர், யூசுப் உதவி வேளாண் அலுவலர் ஆகியோர் உயிர் உரங்களின் முக்கியத்துவம் குறித்து கூறி நெற்பயிருக்கு அசோஸ்பைரில்லம் உயிர் உரம் கொண்டு விதை நேர்த்தி செய்தல் முறைகளை செயல்முறை செயல்விளக்கம் செய்து காட்டி விளக்கி கூறினர். பயிற்சியில் கலந்து கொண்ட அனைத்து விவசாயிகளுக்கும் நெல் பயிருக்கு ஏற்ற அசோஸ்பைரில்லம் உயிர் உரங்களை ராஜேந்திரன் வேளாண் துணை இயக்குனர் உழவர் பயிற்சி நிலையம் வழங்கினார்.

பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு ஒருங் கிணைந்த பண்ணையம் குறித்து தொழில்நுட்ப துண்டு பிரசுரம் வழங்கப்பட்டது. பயிற்சி முடிவில் வட்டார தொழில்நுட்ப மேலாளர் பானுமதி நன்றி உரை கூறினார். பயிற்சிக்கான ஏற்பாடுகளை பவித்ரன் மற்றும் சோனியா உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் செய்திருந்தனர்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**



# நிலக்கடலை விதைப்பண்ணையில் திரட்சியான நிலக்கடலை பெற இலைவழி ஊட்டச்சத்து கரைசல்

திருச்சி, அக்.1

விவசாயிகள் நிலக்கடலை விதைப்பண்ணையில் மகசூலை அதிகரிக்கவும், பொக்கற்ற திரட்சியான காய்களைப் பெறுவதற்கும் திருச்சிராப்பள்ளி மாவட்ட விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்பு உதவி இயக்குநர் பா.நளினி வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது, ஒரு கிலோ விதைக்கு 4 கிராம் டிரைக்கோடெர்மா விரிடியுடன் கலந்து விதை நேர்த்தி செய்து விதைப்பதன் மூலம் பயிர்களை வேர் அழுகல் மற்றும் வாடல் நோய் வராமல் தடுக்கமுடியும். பூக்கும் தருவாயில் பூக்கள் உதிர்வதைத் தடுக்கவும், பூக்கள் மிகுதியாக பூக்கவும், அறுவடையின் போது திரட்சியான நிலக்கலைகளைப் பெறவும் இலைவழியே ஊட்டச்சத்து கரைசல் தெளிப்பது அவசிய மாகும். இதற்கு ஒரு ஏக்கர் பரப்பிற்கு டி.ஏ.பி. ஒரு கிலோ, அமோனியம் சல்பேட் 400 கிராம், போராக்ஸ் 200 கிராம் ஆகியவற்றை இலைவழியாகத் தெளிக்க வேண்டும். இதற்காக முதல் நாள் இரவே 15 லிட்டர் நீரில் ஊறவைக்க வேண்டும். பின்னர், மறுநாள் காலை அக்கரைசலை வடிகட்டி கிடைக்கும் தெளிந்த கரைசலுடன் தேவையான நீர் சேர்த்து 200 லிட்டர் கரைசலாக தயார் செய்ய வேண்டும். அத்துடன் பிளானோபிக்ஸ் என்னும் பயிர் வளர்ச்சி ஊக்கியை 140 மில்லி லிட்டர் கலந்து விதைத்த 25ம் நாள் ஒரு முறையும், பின்னர் 35ம் நாள் மறுமுறையும் ஆக இரு முறை தெளிக்க வேண்டும். தெளிக்கும் பொழுது பரிந்துரைக்கப்பட்ட அளவு சரியாகவும், வயலில் ஈரப்பதம் இருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் மூலம் தயாரிக்கப் பட்ட நிலக்கடலைக்குத் தேவையான ஊட்டச்சத்துக்கள் மற்றும் வளர்ச்சி ஊக்கிகள் கலந்த பூஸ்டரான TNAU நிலக்கடலை ரிச் ஏக்கருக்கு 2 கிலோ என 200 லிட்டர் நீரில் கலந்து லக்கும் பருவத் திலும், காய் பிடிக்கும் பருவத்திலும் தெளிக்கும் போது பூக்கும் திறன் அதிகரித்து பொக்குகடலைகள் குறைந்து விளைச்சல் 15 சதவீதம் வரை அதிகரிக்கும். வேளாண்மைத் துறை மூலம் தயாரிக்கப்பட்ட நிலக்கடலை நுண்ணூட்ட உரக்கலவையை ஏக்கருக்கு 5 கிலோ வீதம் இடுவதன் மூலம் நிலக்கடலையின் மகசூல் மற்றும் தரம் அதிகரிக்கும். நிலக்கடலை பயிரில் விழுதுகள் மண்ணில் எளிதாக இறங்கவும், திரட்சியான எண்ணெய் சத்துமிக்க காய்கள் பெறுவ தற்கும், சுண்ணாம்பு சத்தும், கந்தக சத்தும் தேவைப்படுகின்றன.

எனவே 45ம் நாள் நிலக்கடலைக்கு மண் அணைப்பதற்கு முன் ஏக்கருக்கு 160 கிலோ கிராம் ஜிப்சம் இட்டு, களைகளை நீக்கி, செடிகளை சுற்றி நன்கு மண் அணைத்து விடவேண்டும். இதனால் நிலக்கடலை பயிரின் விழுதுகள் மண்ணுக்குள் இறங்கி அறுவடை யின் போது திரட்சியான காய்கள் அதிகளவில் உருவாக உதவுகிறது.

விவசாயிகள் விதைப்பண்ணை அமைத்து நல்ல தரமான விதைகளை தேர்வு செய்து விதைப் பயன்பாட்டுக்காக வழங்கும் போது அந்த விதைகளுக்கு உள்ளூர் சந்தையில் விலை கிடைப்பதைவிட அதிக விலை வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் மூலம் கிடைக்க பெறுவதால் அதிக லாபம் பெறலாம்.



# உளுந்து பயிரில் மஞ்சள் தேமல் நோய் வாராமல் தடுப்பது எப்படி?

தற்போது மானாவாரியாக தென்மாவட்ட கரிசல் மண் நிலங்களில் புரட்டாசி பட்ட உளுந்து ( BLACK GRAM ) விதைப்பு நடைபெற்று வருகிறது. ஒரு சில இடங்களில் முளைத்து செடிகள் வந்துள்ளன. மஞ்சள் தேமல் நோய் (YELLOW MOSAIC DISEASE) இது வைரஸ் ( VIRUS ) நச்சுரி நோயாகும். பயிரின் இலைப்பரப்பில் முதலில் சிறிய புள்ளிகள் தோன்றி படிப்படியாக மஞ்சள் நிறப் படலங்களாக மாறி விடும். மஞ்சள் தேமல் நோய் உளுந்தை மட்டுமின்றி பயறு வகை பயிர்களை (PULSES CROPS) தாக்கும்.

**நோயின் அறிகுறிகள் (SYMPTOMS)**

மஞ்சள் நிற தேமல் படலங்கள் முதலில் இளம் இலைகளில் காணப்படும். இந்த நோயின் பாதிப்புக்குட்ட பயிர் முதிர்ச்சியடைய தாமதமாகும். மஞ்சள் தேமல் நோயால் செடிகள் வளர்ச்சி குன்றி காய் பிடிக்காமல் மலட்டு செடியாக இருக்கும்.

**தடுப்பு நடவடிக்கை (CONTROL MESAURES)**

1) நோய் தாக்காத உளுந்து ரகங்கள் (வம்பன் 6, 8 ரகங்களை) பயிரிடலாம்.

2) இந்த நோயை பரப்பும் வெள்ளை ஈக்கள் (WHITE FLY) கட்டுப்படுத்த மஞ்சள் நிற டப்பாக்களில் விளக்கெண்ணெய் (CASTER OIL) தடவி ஏக்கருக்கு 5 என்ற அளவில் குச்சியில் கவிழ்த்து வைக்க வேண்டும் (YELLOW STICKY TROPS).

3) ஆரம்ப நிலையிலே செடியை பிடுங்கி எறிய வேண்டும் (EARLY STAGES).

4) விதைகளை ஒரு கிலோ விதைக்கு 2 மிலி இமிடா குளோப்பிரிட் கலந்து 24 மணி நேரம் கழித்து விதைக்க வேண்டும்.



**5) உளுந்து ஊடுபயிர்**

வெங்காயம், கொத்த மல்லி / மணத்தக்காளி போன்ற பயிர்களை ஊடுபயிராக பயிரிட்டால் வெள்ளை ஈக்கள் நடமாட்டம் குறையும்.

**6) வரப்பு பயிர்**

வெள்ளை ஈக்கள் வயலுக்குள் வாரமல் தடுக்க வயலின் வரப்பு ஓரத்தில் இரண்டு வரிசை நெருக்கமாக சோளத்தை விதைக்க வேண்டும்.

7) ரோகார் 200 மிலி/ தயோமீத்தாக்சம் 40 கிராம் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். மருந்து கரைசல் பயிரின் பாகங்களில் எல்லா பாகங்களில் நன்றாக பரவிட ஒட்டும் திரவத்தை ( சாண்டோவிட், இன்ட்ரான் ) ஒரு லிட்டர் மருந்து கலவைக்கு கால் மி.லி விதம் சேர்த்து கலக்கி தெளிக்க வேண்டும்.

ஒருங்கிணைந்த முறையில் பயிர் பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொண்டால் மஞ்சள் தேமல் நோயை வாராமல் தடுக்க முடியும்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**



# வேளாண் கண்காட்சி மற்றும் புத்தக கண்காட்சி நடைபெற்றது

ஈரோடு, அக்.1

ஈரோடு மாவட்டம், கோபி அருகில் கொளப்பலூர் கிராமத்தில் 26, 27/9/26 சனி, ஞாயிறு அன்று வேளாண் கண்காட்சி மற்றும் புத்தக கண்காட்சி நடைபெற்றது.



நான்காவது ஆண்டாக சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார்கள். மாணவர்கள், விவசாயிகள், வேளாண் விஞ்ஞானிகள் பங்கேற்றனர். இதுபோல மாநிலமெங்கும் நடைபெற வேண்டும்.

இயற்கை வேளாண்மை என்பது ஒரு கடினமான விதிமுறை களோடு செய்ய வேண்டும் என்பது போல் சமூக வலை தலங்களில் மற்றும் பலரால் விளம்பரப்படுத்தப்படுகிறது. வியாபார நோக்கில் பல இயற்கை இடுபொருட்கள் விற்பனை செய்யப்படுகிறது. தற்சார்பு என்பது தான் இயற்கை வேளாண்மையின்அடிப்படை, இதை மறந்து புட்ரீசல் போல Enjoy விரிவடைந்துள்ளது. பற்றாக்குறைக்கு அரசு மானிய விலையில் விநியோகிக்கிறது.

பயிற்சி மற்றும் முயற்சி இருந்தால் போதும். இலாப நோக்கமற்ற சமூக அக்கறையுடன் தொடர்வோம்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha

Office
Rithvik Pipe Company, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

POWERGRID BHEL

Factory
Rithvik Pipe Company, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# தரமான விதைகளை உறுதி செய்யும் விதை பரிசோதனை நிலையம்

சிவகங்கை, அக்.1

நல்ல மகசூலுக்கு தரமான விதை மிகவும் அவசியம். விதையின் தரத்தை அறிவியல் முறையில் உறுதி செய்வதற்காக வேளாண்மைத் துறையின் கீழ் செயல்படும் விதை பரிசோதனை நிலையங்கள் முக்கியப் பணியை மேற்கொண்டு வருகின்றன. விதை உற்பத்தியாளர்கள், விதை விற்பனையாளர்கள்மற்றும் விவசாயிகளிடமிருந்து பெறப்படும் விதை மாதிரிகள் இந்நிலையங்களில் பல்வேறு தரப்பரிசோதனைகளுக்கு உட்படுத்தப் படுகின்றன.

விதை பரிசோதனையில் முதன்மையாக புறத்தூய்மை (Physical Purity), முளைப்புத்திறன் (Germination), ஈரப்பதம் (Moisture), பிறரக விதைகள்/வேறுபடுத்தக்கூடிய பிறரகங்கள் (Other Distinguishable Varieties – ODV) போன்ற முக்கியப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

புறத்தூய்மை பரிசோதனையில், விதை மாதிரியில் உண்மையான பயிர் விதைகளின் சதவீதம், பிற பயிர் விதைகள், களை விதைகள் மற்றும் மண், கல், தூசி, தாவரத் துணுக்குகள் போன்ற inert matter ஆகியவை கண்டறியப் படுகின்றன. இதன் மூலம் விதை மாதிரியின் தூய்மை மற்றும் விதைப்பதற்கான தகுதி மதிப்பிடப்படுகிறது.

முளைப்புத்திறன் பரிசோதனை, விதை விதைக்கப்பட்ட பின்னர் எத்தனை விதைகள் ஆரோக்கியமான நாற்றுகளாக முளைக்கும் என்பதை அறிய மேற்கொள்ளப்படுகிறது. விதையின் முளைப்புத்திறன் அதிகமாக இருந்தால் வயலில் சீரான பயிர் எண்ணிக்கையைப் பெறுவதற்கான வாய்ப்பு அதிகரிக்கிறது. விதை வகைக்கு ஏற்ப உரிய வெப்பநிலை, ஈரப்பதம் மற்றும் பரிசோதனை முறைகளைப் பின்பற்றி முளைப்புத்திறன் மதிப்பிடப்படுகிறது.

ஈரப்பதப் பரிசோதனை, விதையில் உள்ள நீரின் அளவை கண்டறிவதற்காக மேற்கொள்ளப்படுகிறது. விதைகளில் அதிக ஈரப்பதம் இருந்தால் சேமிப்புக் காலத்தில் பூஞ்சை வளர்ச்சி,

விதையின் தரக்குறைவு மற்றும் சேமிப்புத்திறன் குறைதல் போன்ற பிரச்சினைகள் ஏற்படலாம். எனவே விதைகளை சேமிப்பதற்கு முன்பும், சேமிப்புக் காலத்திலும் உரிய ஈரப்பதத்தை உறுதி செய்வது முக்கியமானதாகும்.

ODV பரிசோதனையில், பரிசோதிக்கப்படும் விதை ரகத்திலிருந்து வேறுபட்ட, அடையாளம் காணக்கூடிய பிறரக விதைகள் உள்ளனவா என்பது கண்டறியப்படுகிறது. குறிப்பாக சான்று விதைகளின் ரகத் தூய்மையை உறுதி செய்வதில் இப்பரிசோதனை முக்கியத்துவம் பெறுகிறது.

விதை பரிசோதனை நிலையங்களில் சான்று விதை மாதிரிகள், விதை ஆய்வாளர் மூலம் பெறப்படும் ஆய்வாளர் மாதிரிகள் மற்றும் விவசாயிகள்/விதை உற்பத்தியாளர்கள்/விற்பனையாளர்களின் பணி மாதிரிகள் ஆகியவை பரிசோதிக்கப்படுகின்றன. பரிசோதனை முடிவுகளின் அடிப்படையில் விதை தர நிலைகளை பூர்த்தி செய்கிறதா என்பதை அறிந்து கொள்ள முடியும்.

விவசாயிகள் தாங்கள் உபயோகிக்கும் விதைகளை சிவகங்கை – தொண்டி ரோடு, வேளாண்மை ஒழுங்குமுறை விற்பனைக்கூட வளாகத்தில் அமைந்துள்ள அரசு விதைப் பரிசோதனை நிலையத்தில் விதை மாதிரியை கொடுத்து ரூ.80/– கட்டணம் செலுத்தினால், அவ்விதை பரிசோதனை செய்யப்பட்டு முடிவறிக்கை வழங்கப்படும் என்று விதைப்பரிசோதனை அலுவலர் சி.சிவகாமி மற்றும் வேளாண்மை அலுவலர் ச.பாலகணபதி ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**



# இப்கோ மரக்கன்றுகள் நடும் விழா



தஞ்சாவூர், அக்.1

தூய்மை இந்தியா பிரச்சாரத்தின் (Swachh Bharat Mission) ஒரு பகுதியாக, இந்திய உழவர் உரக்கூட்டுறவு நிறுவனம் சார்பில் இன்று ஒரத்தநாடு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் தூய்மை பணி மற்றும் மரக்கன்றுகள் நடும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக, பள்ளி வளாகம் இப்கோ நிறுவன அலுவலர்கள், ஒரத்தநாடு உரக்கடை உரிமை யாளர்கள், பேரூராட்சி பணியாளர்கள் மற்றும் பிற பங்கேற் பாளர்களின் பங்களிப்புடன் தூய்மைப்படுத்தப்பட்டது. மேலும், சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் தூய்மையான, பசுமையான சூழலை உருவாக்குவதன் அவசியத்தை வலியுறுத்தும் வகையில் பள்ளி வளாகத்தில் மரக்கன்றுகள் நடப்பட்டன.

நிகழ்ச்சியில் இப்கோ கள அலுவலர் எஸ்.மாரியப்பன் மாணவிகளிடம் பிளாஸ்டிக் மற்றும் பாலித்தீன் பைகளால் ஏற்படும் தீமைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

பிளாஸ்டிக் பயன்பாட்டைக் குறைக்கும் வகையில், சுற்றுச் சூழலுக்கு உகந்த மாற்றாக துணிப் பைகளைப் பயன் படுத்துமாறு மாணவிகளுக்கு அறிவுறுத்தினார்.

இதனை ஊக்குவிக்கும் வகையில், IFFCO சார்பில் மாணவிகள் மற்றும் பேரூராட்சி பணியாளர்களுக்கு துணிப் பைகள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்ச்சியில் லோகநாதன், ஒரத்தநாடு பேரூராட்சி, அனுராதா, தலைமை ஆசிரியை, பெண்கள் மேல்நிலைப்பள்ளி, ஒரத்தநாடு, வீ.நடராஜன், உரிமையாளர், பொன்வளம் அக்ரோ, எஸ்.சரவணன், உரிமையாளர், சோமுஒந்திரியார் அக்ரோ மற்றும் ராகுல், பாரதி, IFFCO Bazar மேல உள்ளூர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பொது இடங்களைத் தூய்மையாகப் பராமரித்தல், பிளாஸ்டிக் பயன்பாட்டைக் குறைத்தல், மரக்கன்றுகளை நட்டு வளர்த்தல் மற்றும் சுற்றுச்சூழலைப் பாதுகாத்தல் ஆகியவற்றில் அனைவரின் கூட்டு பங்களிப்பின் அவசியத்தை இந்நிகழ்ச்சி வலியுறுத்தியது.

மேலும், மாணவர்கள் தங்களது அன்றாட வாழ்வில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு சார்ந்த நல்ல பழக்கங்களைப் பின்பற்றவும் ஊக்குவிக்கப்பட்டனர்.



# விதைப்பண்ணை அமைத்தால் விவசாயிகளுக்கு கூடுதல் லாபம்

இராமநாதபுரம், அக்.1

இராமநாதபும் மாவட்டத்தில் நடப்பு பருவத்தில் வேளாண் பணிகள் தொடங்கியுள்ளது. ஆகவே விவசாயிகளுக்குத் தேவையான விதைகளை உற்பத்தி செய்வதற்கு அனைத்து வட்டாரங்களிலும் விதைப்பண்ணைகள் அமைக்கத் திட்டமிடப் பட்டுள்ளது.

மாவட்டத்தில் விவசாயிகளின் தேவையை கருத்தில் கொண்டு நெல் விதையின் உற்பத்தியை அதிகரிக்க நடப்பு ஆண்டில் திட்டமிடப்பட்டுள்ளது.

இராமநாதபுரம் மாவட்டத்தில் நெல் விதைப்பண்ணை அமைப்பதற்கு தேவையான வல்லுநர் விதை, ஆதாரநிலை மற்றும் சான்றுநிலை விதைகளான கோ 51, கோ 55, ஏடிடீ 45, ஏடிடீ 53, ஏடிடீ 54 போன்ற குறுகிய கால விதை இரகங்கள் மற்றும் டிகேஎம் 13, ஆர் என் ஆர் 15048 போன்ற மத்திய கால விதை இரகங்களை தேர்வு செய்யலாம்.

விதைகளின் விற்பனை ரசீது மற்றும் சான்றட்டைகள் ஆகியவற்றை விதைப் பறிக்கையுடன் இணைத்து சம்பந்தப்பட்ட வட்டார வேளாண்மை உதவி இயக்குநர்கள் மூலமாக விதைப் பண்ணைகளை பதிவு செய்திடல் வேண்டும்.

விதைப்பண்ணை அமைக்க விதைச்சான்று கட்டணமாக ஒரு ஏக்கருக்கு ஒரு விதைப்பு அறிக்கைக்கு பதிவுக்கட்டணம் ரூ.25/-ம் வயலாய்வு கட்டணமாக ஒரு ஏக்கருக்கு ரூ.100/-ம் விதை பரிசோதனைக் கட்டணமாக ரூ.80/-ம் செலுத்த வேண்டும்.

விதைத்த 35ம் நாள் அல்லது பயிர் பூப்பதற்கு 15 நாட்கள் முன்பு இதில் எது முன்னதோ அதற்குள் பதிவு செய்ய வேண்டும். விதைப்பண்ணையில் இரு வேறு பகுதிகள் 50 மீட்டர்களுக்கு அதிக இடைவெளியில் இருந்தாலோ, விதைப்பு நாள் 7 நாட்களுக்கு மேல் வித்தியாசப்பட்டாலோ தனித்தனியே பதிவு செய்ய வேண்டும்.

பதிவு செய்த விதைப்பண்ணைகள் விதைச் சான்று அலுவலர்களால் உரிய காலங்களில் வயலாய்வு மேற்கொள்ளப்பட்டு கலவன்கள் அகற்றப்பட்டு, பயிரின் வளர்ச்சி கண்காணிக்கப்படுவதால் தரமான விதை உற்பத்தி செய்யப் படுகிறது.

இவ்வாறு கலவனற்ற, இனத்தூய்மை உள்ள விதைப் பண்ணைகளிலிருந்து கொள்முதல் செய்யப்படும் விதை களுக்கு கொள்முதல் மற்றும் விற்பனை மானியம் விவசாயி களுக்கு வழங்கப்படுகிறது.

எனவே, இந்த அரிய வாய்ப்பை பயன்படுத்தி நெல் விதைப்பண்ணை அமைத்து விவசாயிகள் கூடுதல் லாபம் பெறலாம்.

இது தவிர சிறுதானியங்களான குதிரைவாலி, கேழ்வரகு, கம்பு, வரகு, சாமை, பயறுவகை உளுந்து மற்றும் எண்ணெய் வித்துப் பயிர்களில் நிலக்கடலை, எள் முதலிய பயிர்களில் விதைப் பண்ணை அமைக்க இருக்கும் விவசாயிகளும் விண்ணப் பிக்கலாம் என இராமநாதபுரம் விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்பு உதவி இயக்குநர் பொ.இரத்தினகுமார் கூறியுள்ளார்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**



# நெல் இரகங்களும் சிறப்புகளும்

பொலிவான மணிகள் / பொன்னான விளைச்சல் / பொன்னி நெல்

வெண்மணி அரிசி / விரும்பத்தகு சுவை / வெள்ளைப் பொன்னி

நீள்மணி அரிசி / நறுமணம் வீசும் / பாசுமதி

சன்னமணி அரிசி / சுவைமணம் சேர்க்கும் / சம்பா மசூரி

அதிக மகசூல் / அழகிய மணிகள் / அட்சயா பொன்னி

குறுகிய காலம் / குவியும் மகசூல் / CO ஐம்பத்தொன்று

விரைவில் விளையும் / நிறைவான மகசூல் / ADT நாற்பத்து மூன்று

சீரான வளர்ச்சி / சிறந்த மகசூல் / ADT முப்பத்தேழு

நீர்நிலம் விரும்பும் / நிறைவான விளைச்சல் / CR ஆயிரத்து ஒன்பது

சன்னமணி அரிசி / சுவைமிகு உணவு / BPT ஐயாயிரத்து இருநூற்று நான்கு

வறட்சியைத் தாங்கி / வளமுடன் விளையும் / ASD பதினாறு

குறுகிய காலம் / குவிந்திடும் மகசூல் / ADT நாற்பத்தைந்து

சீரான வளர்ச்சி / சிறந்த விளைச்சல் / ADT ஐம்பத்துமூன்று

தஞ்சை மண்ணில் / தனிச்சிறப்பு பெறும் / TRY மூன்று

வறட்சியைத் தாங்கும் / வளமான மகசூல் / CO ஐம்பத்திரண்டு

மணமிகு மணிகள் / மனமகிழ் சுவை / கிச்சிலி சம்பா

மண்ணின் பாரம்பரியம் / மகத்தான வலிமை / மாப்பிள்ளை சம்பா

கருமணி நெல் / குணமிகு பாரம்பரியம் / கருங்குறுவை

தூய்மணி நெல் / தூய சுவை தரும் / தூயமல்லி

சிறுமணி நெல் / சிறந்த மணம் தரும் / சீரகச் சம்பா

குறுகிய செடி / குவிந்திடும் மணிகள் / குள்ளக்கார்

காட்டிலும் வளரும் / கடினத்தையும் தாங்கும் / காட்டுயாணம்

கம்பீர நெல் / கதிர்நிறை விளைச்சல் / கருடன் சம்பா

இனிய மணம் வீசும் / இன்பச் சுவை தரும் / இலுப்பைப்பூ சம்பா

சன்னமணி அரிசி / சுவைமிகு உணவு / சேலம் சன்னா

பெண்களுக்கு ஏற்ற / பாரம்பரிய நெல் / பூங்கார்

கடின மண்ணிலும் / குவியும் விளைச்சல் / குழியடிச்சான்

அறுபது நாளில் / அறுவடை தரும் / அறுபதாம் குறுவை

சேலம் வயலில் / சிறக்கும் மகசூல் / சேலம் சம்பா

மணமிகு அரிசி / மகிழ்வூட்டும் சுவை / மணிச்சம்பா

நெல் வளர்கவே

எத்தனை எத்தனை இரகங்கள்,
எண்ணற்ற எண்ணற்ற குணங்கள்!

விவசாயி வாழ்வில் வளம் கொழிக்கும்,
வளமான சிறப்புமிகு நெல் இரகங்கள்!

உணவுப் பாதுகாப்பைக் காத்திடும்,
உலகின் உயிர்நாடியாய் விளைந்திடும்!

நாட்டின் வளத்தையும் நலத்தையும்,
நாளும் காத்திடும் அரும்பெரும் பயிரே!

இறைவன் படைத்த அற்புதப் பயிரே,
இனிதே வளர்க! வளமுடன் வளர்க!

வயல்கள் செழிக்க வளர்க!
விவசாயி வாழ்வு சிறக்க வளர்க!

மண்ணின் மாண்பை காத்து வளர்க!
மக்களின் பசியைப் போக்கி வளர்க!

தமிழகத்தின் நெல்வளம் பெருக,
தலைமுறை தோறும் தொடர்ந்து வளர்கவே!

நெல் வளர்க! வளம் வளர்க!
விவசாயம் செழிக்க, நாடு வளர்கவே!

தொகுப்பு :
கா.அரிபுத்திரன்,
வேளாண்மை அலுவலர்,
உயிரியல் கட்டுப்பாட்டு ஆய்வகம்,
விருதுநகர்.

கல்யாண்
ஜுவல்லர்ஸ்



Toll Free No. 1800 - 4257333